
நேஷனல் புரொடக்ஷன்ஸ்
சிங்காரி
BALU BROS

# சிங்காரி

## நடிகர்கள்

ஸ்ரீ T. R. ராமச்சந்திரன் ... நித்யானந்தம்
,, S. V. சகஸ்ரநாமம் ... சிவப்ரகாசம்
,, D. பாலசுப்ரமணியம் ... நடராஜ முதலியார்
,, V. K. ராமஸ்வாமி ... துரைசாமி
,, C. V. நாயகம் ... பசுபதி
,, T. K. ராமச்சந்திரன் ... சாமிநாதன்
,, C. S. பாண்டியன் ... சம்பந்தம்
,, T. V. ராதாகிருஷ்ணன் ... காக்கா
,, தங்கவேலு ... நட்டுவனார்

மற்றும் :—D. V. ஷண்முகம் பிள்ளை, மாணிக்கம், கோவிந்தன், வேலப்பன், ராஜு, வேலு, கிட்டு. ஹரிஹரன், திருவேங்கிடம், சங்கரய்யர், கஜபதி, பூபதி, கோஷி, ரத்னம் முதலியோர்,

## நடிகையர்

ஸ்ரீமதி லலிதா ... சிங்காரி (செல்லம்)
,, பத்மினி ... பத்மினி (தங்கம்)
,, ராகினி ... ஜிம்கி
,, N. R. லீலா ... செல்லம்
,, M. நிர்மலா ... தங்கம்
,, C. K. சரஸ்வதி ... சரசு
,, M. M. ராதாபாய் ... காமாக்ஷி அம்மாள்
,, M. S. S. பாக்யம் ... காந்தா

மற்றும் :— தங்கம்மா, ரீடா, கிருஷ்ணவேணி, மாலா, சுந்தரி, கமலா, ராஜேஸ்வரி, மீரா, சாந்தா, சக்கு, சரஸ்வதி, ராதா, பிரபா-முதலியோர்.

| | |
|---|---|
| மூலக்கதை : ... ... | V. S. வேங்கடாசலம் |
| திரைக்கதை : ... ... | T. R. ரகுநாத் |
| வசனம் : ... ... | V. N. சம்பந்தம் |
| பாடல்கள் : ... ... | தஞ்சை ராமையாதாஸ்<br>K. P. காமாக்ஷி சுந்தரன்<br>" கண்ணதாஸன் " |
| சங்கீதம் : ... ... | S. V. வேங்கட்ராமன்<br>T. R. ராமநாதன்<br>T. A. கல்யாணம் |
| நடனங்கள் சிக்ஷை : ... | B. ஹீராலால் |
| பரதநாட்டியம் : ... | P. S. கோபாலகிருஷ்ணன் |
| ஆடைகள் : ... ... | M. நடேசன் |
| அலங்காரம் : ... ... | ஹரிபாபு<br>ராமச்சந்திரன்<br>தனகோடி |
| ஒளிப்பதிவு : ... ... | P. S. செல்வராஜ் |
| ஒலிப்பதிவு : ... ... | M. லோகநாதன் |
| கலை ஜோடனை : ... | N. குப்புசாமி<br>செல்லம் - பாபு |
| லெபரேடரி : ... ... | T. R. எதிராஜ் - நடேசன்<br>கணேசன் - முத்தையன் |
| எடிட்டிங் : ... ... | S. A. முருகேசன் |
| ,, உதவி ... | M. ராமகிருஷ்ணன் |
| டைரக்ஷன் : ... ... | T. R. ரகுநாத் |
| ,, உதவியாளர் | V. நடராஜ் - S. A. முருகேஸ்<br>M. ராமகிருஷ்ணன்<br>N. துரைசாமி |
| ஸ்டூடியோ : ... ... | நியூடோன் |

பூரண விநியோக உரிமை :

குமரவேல் பிக்சர்ஸ், மதராஸ் 7

# " சிங்காரி "—கதைச்சுருக்கம்

சென்னை "மோகன் விலாஸ்" ஸ்ரீ நடராஜ முதலியார் தனவந்தர். ஆனால் பழமையில் நம்பிக்கை உள்ளவர். அவர் மகன் சிவப்பிரகாசம் தனது தந்தையின் பழமை குணத்தை கண்டித்து தான் வெளிநாடு போய்வர உத்தரவு கேழ்க்க தந்தைமறுத்ததை கேட்டு மனமுடைகிறான்.

வருமையால் பீடிக்கப்பட்ட பசுபதி முதலியார் தன் மகள் தங்கத்துடன் சென்னையை அடைந்து பல இடங்களில் வேலைகேட்டு கிடைக்காததால் வருத்தத்துடன் ஒரு பேங்க் வாசலில் நிற்க அச் சமயம் ஒரு கொள்ளைக்கூட்டம் பாங்கியில் களவாடி செல்ல ஒன்று மறியாத பசுபதிக்கு எழு வருட சிறை தண்டனை கிடைக்கிறது.

மனதுடைந்த சிவா வெளிநாடு செல்வதாக கேள்விப்பட்ட நடராஜ முதலியார் வேகமாய் வீட்டிற்குப் போகும் வழியில் பசுபதியின் மகள் தங்கம் அவருடைய காரில் மோதிக்கொள்ளவே நடராஜ முதலியார் அவளை தன் வீட்டிற்கழைத்துவந்து பத்மினி என்று பெயரிட்டு பள்ளியில் சேர்த்து வளர்த்து வருகிறார். அதே பள்ளியில் செல்லமும் சேர்க்கப்படுகிறாள். செல்லமும் பத்மினியும் சகோதரிகள்போல் பழகி வருகின்றனர்.

எழுவருடங்களுக்குப்பின் கல்லூரி ஆண்டு விழாவில் பத்மினியும் செல்லமும் நடிக்கின்றனர். செல்லத்தின் நடிப்பைப் பார்த்த ஆனந்த நிலைய நாடக சபா நித்யானந்தம் அவளை தன் சபாவில் சேர்த்துக்கொண்டு "சிங்காரி" என்ற புனை பெயருடன் நடனப் பயிற்சியளித்து பம்பாய் முதலிய இடங்களில் நடித்து நல்ல புகழுடன் டெல்லியை அடைகிறார்கள். நடனக் கம்பெனி மானேஜர் சாமிநாதன் சிங்காரியைக் கொண்டு தனி கம்பெனி நடத்த சூழ்ச்சி செய்வதை யறிந்த நித்யானந்தம் அவனை வேலையிலிருந்து நீக்கிவிடுகிறான். சாமிநாதன் சென்னையை அடைகிறான். வெளியூர் சென்று திரும்பிய சிவா தன் வீட்டிற்கு வந்து தகப்பனார் இல்லாமையறிந்து வருந்துகிறான். பத்மினி சிவாவிற்கு ஆறுதலளித்து நாளடைவில் இருவரும் காதலர்களாகிறார்கள்.

சென்னையில் நடனக் கம்பெனியின் ஆரம்ப தினத்தன்று சிவா தலைமை வகிக்க, சிங்காரியின் மனம் சிவாவை நாடுகிறது. சிவாவின் காதலில் மயங்கிய சிங்காரி நடன கம்பெனிக்கு ஒழுங்காகப் போவதில்லை. இதனால் கம்பெனி சீர்குலைகிறது. ஒருநாள் சிங்காரிக்கு பதிலாக பத்மினி நடனமாட சம்மதித்து நடிக்கும் சமயம் சிவா கேழ்விப்பட்டு பத்மினியை வீட்டிற்கு அழைத்துவந்து கோபித்துக் கொள்ள பத்மினி வருத்தத்துடன் வெளியேறுகிறாள்.

பத்மினியின் கதி என்ன? பசுபதி தன் மகளை எப்படி சந்திக்கின்றான்? யாத்திரை சென்ற நடராஜ முதலியார் என்னவாகிறார்? சிங்காரி தாய் தந்தையரை எங்ஙனம் அடைகின்றாள்? நித்யா, சிவா இவர்களின் நிலை—இவைகளைத் திரை சொல்லும்.

## 1. சிறுமி செல்லம்

இசை: T. K. கல்யாணம் பாட்டு: தஞ்சை ராமையாதாஸ்

ஓட்டைப்பல்லைக் காட்டியே—உண்மையாக நாட்டிலே
நாட்டை சுற்றிய தாரு சொல்
நாட்டை மீட்டவர் யாரு சொல்
வழிகாட்டி மறைந்தவர் யாரு சொல்?

அன்பாய் உலகம் போற்றவே—அஞ்சா நெஞ்சம் காட்டியே
பாடாய் பட்டவர் யாரு சொல்
நாடாளுபவர் யாரு சொல்
முடி சூடா மன்னன் யாரு சொல்?

## 2. காக்கா - ஜிம்கி

இசை: S. V. வெங்கட்ராமன் பாட்டு: தஞ்சை ராமையாதாஸ்

ஆவோ மஹராஜ்! மேலே பகவான்—கீழே மனுஷாளுங்கோ
அந்த மனுஷாளும் பத்து மாஸத்திலே
பொறந்தவங்கோ

ஊபர்கி ஸௌகார் வசிக்கிறுங்கோ
ஒட்டுத் திண்ணையிலே நம்பள் படுக்கறுங்கோ
அங்கே ஒவலும் விம்டோவும் விழுங்கராங்கோ
இங்கே ஒருவா பூவாவுக்கு ததிங்கிணத்தோம் [போடுறுங்கோ!
ஒரு ஜாண் வயிரே இல்லாட்டா
இந்த உலகினில் ஏது கலாட்டா
உணவு பஞ்சமே வராட்டா—நம்ப
உயிரை வாங்குமா பரோட்டா.

பச்சை ஓந்திபோலே—பணம்—ஓடி மறைவதினாலே
படாடோபம் செய்யாட்டா—ஒரு பைசா வருமா கேட்டா

ஆவோ மஹராஜ்! மேலே மழையில்லே
கீழே விளைவுமில்லே
ஆ...அதனாலே படி அரிசி வெலெ குறையவே இல்லே
தில்லானா பாடுறோம் நல்லாத்தான் ஆடுறோம்
ஆனா—சால்னா இட்லிக்கு கால்ணா லாட்ரீஹை
ஒருஜாண் வயிரே இல்லாட்டா
இந்த உலகினில் ஏது கலாட்டா

கண்ணடிக்கிறாரு—பையில் கையைப் போடுராரு
என்ன சொல்லுராரு வெத்து—வேட்டா நோட்டா பாரு
(ஒருஜாண்)

## 5. காலேஜ் மேடை—I

இசை: T. K. கல்யாணம் பாட்டு: தஞ்சை ராமையாதாஸ்

பாலு—பாலு—பசும்பாலு
வாட்டுப் பயலுக்கே
வாழ்க்கைப் பட்டதால் வயத்துப் பிழைப்பு
இதுதாங்க—நிஜந்தாங்க

என் வீட்டுக்காரன் வெத்து வேட்டுத்தானே
அதைக் கேட்டுப் பாத்தா சிரிப்பாங்க
பாலு—அம்மா—பாலு

நான் காடுமலைமுதல் மேடு பள்ளமே
கடந்து வந்தேன் மதராசு
பால் விற்றதாலே நல்ல காசு
கறந்த பாலுங்கோ காய்ச்சிப் பாருங்க
விருந்துக்காகுங்க விலையும் மலிவுங்க
பட்டாளத்திலே கர்னல் துரைக்கும்
பாலு ஊத்தரேன் கேட்டுக்குங்க
பாப்புலரான சினிமா ஸ்டாருக்கும்
நான்தா ஊத்தரேன் கேட்டுக்குங்க
இந்த வட்டாரத்திலே கேட்டுக்குங்க
அந்த மிட்டாதாரையும் கேளுங்க
கேட்டா் கேளுங்க விட்டா விடுங்க
கேவலமாகவே நினைச்சுபிடாதீங்க

ஒரு கொள்ளையிலே போவான் அட
குருட்டுத்தனமா சைகிளைவிட்ட
கொம்மாளத்திலே இடி விழவேணும் கடவுளே
நீதான் கேளு கடவுளே—நீதான் கேளு கடவுளே.

வாடிக்கை பாலைக் கொடுத்திடவே எனக்கே
வழி ஒன்றும் தெரியலையே—வகை ஒன்றும் புரியலையே

காசில்லாமே கிடைக்கும் பாலு
கறவே மாடு தயவில்லாத பாலு
காலமெல்லாமே கறக்கும் பாலு
கார்ப்பரேஷன் பாலு காவேரிப்பாலு—முனிசி பால்டி பாலு

முழுச்சிக் கிட்டான் ஆளு—நீ முறைக்காதே அம்மாளு
பாலில் தண்ணீர் கலந்ததால் போலீஸ்
கண்ணாலே பார்த்தானே பூலீஷ்
அட போய்யா — இடியட்

இடியட்டு எடவெட்டு எதிர்வெட்டு இதுவெல்லாம்
இந்த இளவெட்டு இடம் வேண்டாம்
நடை கட்டும் நான் போறேன்
எங்கு போராய் பதில் சொல்லு
கம்பி எண்ணவேண்டும் சும்மா நில்லு.

அம்மாடி நெய்யோடு மார்வோவை சேக்குரான்
அரிசியோடு கல்லே அளந்துதான் போடுரான்
அதைவிட்டு இதைவிட்டு அநியாயமாய்க் கெட்டு
காப்பித்தூளில் கலக்கும் புளியங்கொட்டையைவிட்டு
இதுமட்டும் குற்றமா கூறு... எங்க
மச்சான்கிட்டே சொல்வேன் பாரு
சும்மா நிறுத்துங்க ஒன் பார்ட்டி போரு

பாலேத்தட்டிய பாழாய்ப் போவான் போனனே அந்தப்
பாவியை விட்டுட்டு என்னைப் பிடிக்கிறே நீதானே
எப்படிப் போனு—அப்படிப் போனு
எங்கே—அதோ அங்கே

## II

நேத்திருந்து காத்திருந்தேன்
நேரில் உன்னைக் கண்டு கொண்டேன்
நூத்தி நாற்பத்தி நாலாம் நம்பரும் நானே
உன்னைப் பார்த்ததாலே அரெஸ்டு செய்தேன் மானே.

யாரையா ?—ஓம் பேரென்ன ?
எந்தன்பேரு பாவியென்பார்—புருஷன்பேரு சாவியென்பார்
பரிசம்போட்ட மாமன் மகன் பேர் மருதக் கோனாரு—ஐயா
ஒன் பார்ட்டி போரு.

தாலியில்லையா
தருந்த ஆளும் வல்லையே
புருஷன் இருப்பதா ஏன் சொன்னே
பிழைக்கிற வழியைத்தான் நான் சொன்னே

அப்பன் பேரென்ன—அர்த்த நாரீங்க
அர்த்த நாரியா......
அர்த்த நாரிக் கோனுன் பெத்த
ஆனந்தக் கோனுனின் தங்கை
அம்புஜவல்லி என்பது...யாரு...யாரு

அச்சுப் புள்ளி அடையாளம்
கச்சிதமாகவே உள்ள
அம்புஜவல்லிதான் எந்தன் பேரு...பேரு

கை தனிலே விலங்கை மாட்டவா
உன் கழுத்தினிலே விலங்கை மாட்டவா
எதுக்கய்யா—அதுக்குத்தான்

உன் மாமா மகனும் நான்தானே
அந்த மருதக் கோனு நான்தானே
மாமா மகனு—ஆமான்னு

மவராசன் போலே மச்சான் வந்தாரே
வெகுநாளாய்க் காணுமலே
ஒன் பார்ட்டி போரைக் கண்டேனப்பா

ஊட்டியிலே நானே டூட்டியும் செய்தேனே
ஏட்டு வேலே கிடைக்குமென்று மாத்தியே வந்தேனே
இது நாளாய்த்தானே எதிர்பார்த்தேன் நானே
அதனுலேதானே வந்தேன் மை டீயர் மாமா
சரிதான் மச்சான்...

## III

அதிசய குணமுள்ள அருமை மகளும் உன்பால்
அடைக்கலமே... அடைக்கலமே...

## 4. ஸ்டேஜ்—I

இசை : S. V. வெங்கட்ராமன் பாட்டு : தஞ்சை ராமையாதாஸ்

ஓ செல்லையா நீ வல்லையா—எஞ்சாமி ஏங்கே போனே
மானங் கருக்குது மழை வரப்பாக்குது மச்சானைப்
நாளியும் ஆச்சே என் ராசாவைக் காணோம் [பாத்திங்களா
காலமே போனாரே கரைசேரக் காணோமே

மலுவாக மீனு வாங்கிடுங்க—என்
மச்சான் புடிச்சது பாத்திங்களா—வலை
வச்சான் கெடச்சுது கேட்டிங்களா

புது மீனுதானே வாங்கிடுங்க...இது
போனா வராது பாத்திங்களா...விலை
தானா படியும் கேட்டிங்களா...

வாளையும் வஞ்சர மீனு வாங்கிடுங்கோ
நாளியும் ஆச்சே என் ராசாவைக் காணோம்
வேளையும் தவறுமே நானே சோறாக்கணும்

## II

கும்மாதே துவச்சி போடு
கொக்கு போல வெள்ளையாவணும்
ஆசோ...ஆசோ...அசொ...அசொ...அசொ

கம்மா கரையில் கும்மா விட்டா
சும்மா வருமா பணமும் காசும்
அய்யா சொ—அய்யா சொ—அசொ...அசொ...அசொ

சலவைபோல கபடமில்லா ஜாதி எங்க ஜாதிங்க
நீங்க பழகப் பழகத்தெரியுங்க எங்க
பரம்பரைக் குணங்க—ஆசொ...ஆசொ...அசொ...அசொ

பொன்னான பூமியிலே எங்க
பொழைப்பு எல்லாந் தண்ணியிலே
மழை பெய்யவேணுமே வெயில்வேணுமே
ஐயப்பா—எங்க சாமி
அய்யா சொ...அய்யா சொ—அசொ...அசொ...அசொ

## III

அஜீ பகடி வாலா...சலாம் படே லாலா
அச்சாஹை—மலாய் தூது
சாய்கரம் லேலோ—சாய்கரம் லேலோ

ஹலோ மிஸ்டர் ஜான்ஸன்
மே ஐ நோ வாட் யூ வாண்ட்—டெல் மீ ப்ளீஸ்
அச்சாஹை மலாய் தூது
சாய்கரம் லேலோ—சாய்கரம்லேலோ

## 5. பத்மினி

இசை : T. K. கல்யாணம் பாட்டு : கண்ணதாஸன்

சுத்தம் செய்யணும்—துடைத்து
சுத்தம் செய்யணும்
அகமும் புறமும் அழுக்கில்லாமல்
ஆணும் பெண்ணும் ஒன்ருய் உலகை (சுத்தம்)

விஞ்ஞானம் தன்னை ஏசி
வேதாந்தப் பெருமை பேசி
அஞ்ஞான இருளில் மூழ்கும்
அப்பாவி மக்கள் மனத்தை... (சுத்தம்)

பூனை குறுக்கே போவது சகுனம்
பானை வண்டியைப் பார்த்தால் சகுனம்
பல்லி கத்தினுல் பலத்த சகுனம்
பருந்து சுத்தினுல் பலே சகுனம்
சகுனம் சகுனம் என்றே வாழ்வை
தகனம் செய்வோரின் மனத்தை... (சுத்தம்)

மூடக்கொள்கைகள் ஒழியணும் நல்ல
மூதறிவாளர் பெருகணும்
தேசம் சிறந்து வாழணும்
சகலமும் தெரியணும் புரியணும்
அறியணும்... வாழ்வை... (சுத்தம்)

தந்திக்கம்பியைக் கண்டவர் யாரு... தெரியாது
சப்மரீனைக் கண்டு பிடித்தவர்... தெரியாது
இந்த ரேடியோ பாடுவதெப்படி... தெரியாது
எலக்ட்ரிக் லைட் எரிவதெப்படி... தெரியாது

டெலிபோன் பேச்சு... ஊஹூம்
டெலிவிஷன் காட்சி... ஆ
பேசும் சினிமா... பாத்திருக்கேன்
வான விமானம்... ஐயோ... தெரியாதே

எதுவும் தெரியாதா... சரி
எமதர்மனுக்கு வாகனமென்ன... எருமைக்கடா

ஆகா... என்ன ஞானம்... என்ன அறிவு...
என்ன முதிர்ச்சி... இப்படி
பாசிபடிந்த மனதைத் திருத்தும் பகுத்தறிவாளர்போல்
தூசிபடிந்த இடங்களை யெல்லாம்சுத்தம் செய்யணும்

## 6. சிவா—பத்மினி

இசை: T. K. கல்யாணம் பாட்டு: தஞ்சை ராமையாதாஸ்

கனி சுவைதரும் அமுதாலே—தன்னாலே
காணும் நிலைதான் காதலோ

மாமலர் தரும் மதுமேலே—வண்டினம்
தாவிடும் நிலைதான் காதலோ

இருவிழிகளும் நிலைமாறி—தன்னாலே
எங்கும் நிலைதான் காதலோ

அலைபோல நிலை மாறுதே—அது
இதுநாள் இல்லாத காரணமேன்

புயல் மீறிப்படகினிலே சென்றாலே
காணும் நிலைதான் காதலோ

தமிழ்ச்சுவையே இல்லாத சோலையிலே
கலைமணமே வீசிடும் காரணமேன்

அனுராகபோக சுகமே இவ்வாழ்வில்
அடைந்தால் அதுதான் காதலோ.

## 7. சம்பந்தம்—காந்தா

இசை: S. V. வெங்கட்ராமன் பாட்டு: தஞ்சை ராமையாதாஸ்

ஊரும் சதமல்ல உற்றாரும் சதமல்ல
ஊருக்குப்போன பெரிய எசமானும் வரவில்லே
பேருக்கு எனக்கு ஒரு ஜோடிக்கும்
வழியில்லே... வழியில்லே

விட்டுடப்போரேன்—வேலையை—விட்டுடப் போரேன்
கெட்டுடப் போரே...வீணு—கெட்டுடப் போரே...

பக்ஷமாயிருந்த சின்ன யெசமானும்
பாம்பாட்டம் சீறி விழுகுரதும்
பத்மினியம்மா எனக்குப் பதிலாக
பம்பரமாட்டம் ஆடுரதும்

பிடிக்கலே...பிடிக்கலே... ஒண்ணும் பிடிக்கலே
விட்டுடப்போரேன்......

இந்த இடம் இல்லேன்னு
எந்த இடம் போனாலும்
தந்தனத்தாம் பாட்டு பாடணும் ஒரு பைசாவுக்குத்
ததிங்கிணதோம் தாளம் போடணும்.

வேலையிலே மனசுவச்சா வில்லா வளைச்சிடுவேன்
தாளம்போட தலையிலெழுத்தா சினிமாவிலே
நான் தலையைக் காட்டி சான்ஸு வாங்கட்டா

மட்காடு தலையிருந்தா போதுமா
அதிலே... மகிமை என்ன இருக்குதுன்னு தெரியுமா
என்ன இருக்கு?—சொன்னுதானே

ஆட்டம் பாட்டம் அடங்கியிருக்கு தெரிஞ்சுக்கோ எனக்கு,
அங்கேதாண்டி அதிர்ஷ்டமிருக்கு புரிஞ்சுக்கோ.
அப்பொ—ஸ்டாருதான்
உடனே—காருதான்

அப்புறம்...
காருமேலே ஸ்டாரிருக்க
ஸ்டாரு பக்கம் நீயிருக்க
ஜோருமேலே காரெடுப்பேன்
ஊரைச்சுத்தி டூரடிப்பேன்
ஜவுளிக்கடை ஷாப்புக்கடை
ஜாலியா ஷராப்புக்கடை
ஜம்பர்வெட்டு சைசுகட்டு
டாலடிக்கும் சிலுக்குப்பட்டு
குத்தாலத்திலே மினுக்கும் பட்டு
அசல் பட்டு ஆசைப் பட்டு
அப்டு டேட்டா எடுத்துக் கட்டு

ஜார்ஜெட்டு வெல்வெட்டு
ஜாக்கேட்டு உட்டால கிரி கிரி
நீ கேட்டதெல்லாம் சரி சரி

அம்மாடி...

அதையும் இதையும் எல்லாம்
வாங்கிப் போட்டு கிட்டு
தாரா ரம் த ராம்... தாரா ரம் தராம்...
உல்லாசமாய்க் காரிலேறியே
ஒய்யாரமாய்க் காத்து வாங்கவே
சந்தோஷமா பீச்சுப் பக்கம் பம் பம் பாம் பாம்

உனக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம் சொல்லு
உள்ளத்தைக் கொண்டே ஒழுங்கா—காலத்தைத் தள்ளு
எதுக்கும் வழியில்லேன்னு எப்படிப்போவே
இதுவும் கிடைக்கல்லேன்னு என்னதான் செய்வே

காவி...காஷாயம்...
கையிலே துந்தினு தாளம்போட
கழுத்திலே மாலையும் ஜாலியா ஆட
திருவோடு ஏந்தி தெருவோடு போனு
பரிவோடு சாதம் பசியாரக் கிடைக்கும்
காலணு கொட்டை நாலணு மொட்டை
இருக்கவே இருக்குது ஏகாந்தம்.

## 8. சிங்காரி

இசை: S. V. வெங்கட்ராமன் பாட்டு: தஞ்சை ராமையாதாஸ்

கானில் வெண்ணிலா போலே உள்ளம்
காதலால் இங்காளே... அலை
மோதுதே தன்னாலே.

கலையும் அமுத நிலையும் தேடுதே
அலையும் மனதில் அமைதி நாடுதே

அன்பு அஹிம்சையும் சத்தியமே தரும்
ஆனந்த பேரின்பக் காவியமே...பர
மானந்த தெய்வீக ஜீவியமே

இன்பமும் துன்ப மநித்திய மே...என்ற
இல்லறத் தியாகமே தாரகமே...தந்த
ஏகப் பரம்பொருள் தாயகமே

## 9. சிங்காரி

இசை : S. V. வெங்கட்ராமன் பாட்டு : K. P. காமாக்ஷி சுந்தரன்

வான வில்லைப்போல வரும் வாலிபந்தானே
எழில் போனபின்னே திரும்பி வராதே

ஆணழகால்தானே மெய்க்காதல் கொண்ட பெண்கள்
நாணமின்றி தன்மானத்தையே நாடறியச்—
—சொல்வதும் உண்டோ... ஞாயமோ

பளபள வெனும் உடை பிறர் பார்த்து மயங்கும் நடை
கலகல வெனும் வளை ஒலி கருத்தை மயக்கும் நிலை—உயர்
கானக்குயிலைப் போலப்பாடி ஆனந்தமாய் ஆடுவேன்

கரும்பு தின்னக் கையில்... பணம்
காசு கேட்பதுண்டோ
விரும்பிய பின் தன் மனதையே
வெளியிடாத ஆண்பிள்ளை யுண்டோ வெட்கமோ
வெளியிடாத ஆண்பிள்ளை யுண்டோ ஞாயமோ (வான)

## 10. காக்கா—ஜிம்கி

இசை : S. V. வெங்கட்ராமன் பாட்டு : தஞ்சை ராமையாதாஸ்

கோணாத மரத்தினிலே...
கூடுகட்டும் கொக்கரக்கோ...
கோட்டை கொத்தளம் மாடி எல்லாம்
தேட்டை போடும் கள்ளனடி... நானே

இந்த ஆட்டமெல்லாம் செல்லாதடா... வீணே
சும்மா மிரட்டிகிட்டு ஷோக்கு நடை போட்டுகிட்டு
அம்மாளு கும்மாளம் போடாதடி... என்
அத்தை மவ ரத்தினமே ஓடாதடி

தகிடு தத்தம் போதும்... உன்
டாப்பு எகிரிப் போகும்

டாப்பு எகிரிபோனா... இந்த
மாப்பிள்ளை விடுவானா...

ஜாடை காட்டி தளுக்குப் பண்ணாதே
சும்மா நிறுத்திக்கோ...
சமயம் பார்த்து கணக்குப் பண்ணாதே

## 11. பத்மினி—சிங்காரி

இசை : S. V. வெங்கட்ராமன்    பாட்டு : தஞ்சை ராமையாதாஸ்

பாரதி எங்கே சொல்லடி பாவலர் புகழ்
பாரத நாட்டின் தமிழ் ஸாரதியான கவி—(பா)

குழந்தையின் உள்ளம்போல் கொஞ்சிடும் பாமாலை
மலர்ந்திட சுதந்திர வழி காட்டினான்
இளந்தமிழ் நடையினில் இலக்கியச்சுவைகாண
இசைக்கவியால் இன்பம் நிலைநாட்டினான்

ததாநி தாநி பதநி தாபம
தபாம பமாக மகாஸ மகமப

தெய்வீக சக்தி தவழும் தேவியின்
அகார உகார மகாரப்ரணவமே
மகாம பதநிதா பதநிஸா
வைபோக உலக வாழ்வு என்றான்

நிஸ தா நிஸ
மெய்யாகவே
மகாரி ஸநீத பதநீ
தென்னாடு என்னாளும் பண் பாடும்......

(பாரதி எங்கே)

ஜிகு ஜிகுஜிகு சமக்கு பாருங்கோ
சம்கி ஜிம்கி சமக்கு பாருங்கோ
ஜிலு ஜிலு ஜிலு ஜிலுக் ஜிலுக்தான்
தக தக தக தளுக் தளுக்தான்
கண கண கண கணக் கணக்தான்
அதுதான் இதுதான் சரிதான் என

ஜிகு ஜிகு ஜிகு......

கலைவானிலே நிலையாகவே
கலைக்காக மலைக்காத வளர்கலை ஜோதி நான்
விலைக்காண மதிக்காத புகழ் ஜெகத்ஜோதி நான்
ஜிலு ஜிலு ஜிலு ஜிலுக் ஜிலுக்தான்
தக தக தக தளுக் தளுக்தான்
கண கண கண கணக் கணத்தான்
அதுதான் இதுதான் சரிதான்—என    ஜிகு ஜிகு ஜிகு

## 12. பசுபதி

இசை : T. K. கல்யாணம் பாட்டு : தஞ்சை ராமையாதாஸ்

ஏழைகள் வாழவே இடமில்லையா
இறைவா இதுதான் உன் லீலையா
இனி ஏழைகள் வாழவே இடமில்லையா
பணம் இருந்துவிட்டால் ஒரு நீதியா
நிலை இழந்துவிட்டால் அவன் பாவியா

பணமே உலகில் ஜீவ நாடியென்றே
பணம் ஏதுமில்லாதவன் பேடியென்றே
இழிவாக நினைத்திடும் காலத்திலே
எவர்தான் மதிப்பாரோ இந்நாளிலே

பசிவேதனை தீரவே வழியில்லையா—தேன்
பால்மணக்கும் தாய் நாட்டிலே—தேன்
பால்மணக்கும் தமிழ் நாட்டிலே...
விதியே இனிதான் விளையாடுவதேன்

வெறும் கானலை நீராய் நாடுவதேன்
மதியால் விதியை வெல்லும் காலத்திலே
வீண் மாயை மறைத்திடும் இந்நாளிலே
இனி ஏழைகள் வாழவே இடமில்லையா.

## 13. பத்மினி (பின்னணி)

இசை : S. V. வெங்கட்ராமன் பாட்டு : தஞ்சை ராமையாதாஸ்

மானமே ப்ரதானமே வாழ்விலே
காணும் இன்பமே சதமல்லவே
கண்மூடி உலகத்திலே......

மனம்போல் வாழ்வு ஏது புவிமீது மானிடபோகமே நிலையா
மதியேன் இழந்தாய் உனையேன் மறந்தாய்...
போற்றிடும் நாவே தூற்றிடுமே பொல்லா உலகம் பாராய்
கும்பிடுங்கரமே கொன்றிடுமே அந்தோ உலகம் பாராய்

பேதையென்றே அநாதையென்றே ஏளனம் செய்வதினாலே
மதியேன் இழந்தாய் உனையேன் மறந்தாய்...

மலையசைந்தாலும் நிலை இழந்தாலும் மனமே நீ கலங்காதே
அலைகடல்மேல் புயல்தனிலே படகுபோல அலையாதே...

அவனன்றி அணுவும் அசையாதே
மகிதலமேல் சுக துக்கமே மாறி மாறி வரும் நிஜமே
மதியேன் இழந்தாய் உனையேன் மறந்தாய் — (மனம்போல்)

## 14. காக்கா—ஜிம்கி


இசை : S. V. வெங்கட்ராமன் பாட்டு : தஞ்சை ராமையாதாஸ்

ஒரு ஜாண் வயிரே இல்லாட்டா
இந்த உலகினில் ஏது கலாட்டா
உயர்வு தாழ்வு ஏதும் இல்லாட்டா
இந்த உலகினில் ஏது கலாட்டா

பச்சை ஓந்தி போலே—மனம்
மாறிடும் காரணத்தாலே
ஒற்றுமைதான் வேண்டும்—இனி
உண்மை நிலைத்திட வேண்டும்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

Printed at Norton & Co., Madras 7


நேஷனல் புரொடக்ஷன்ஸ்
சிங்காரி